**முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்**

**O.S.No.4/2022**

DW2–ஜெயலட்சுமி நாள்.10.11.2025

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

தாவா சொத்தை நான் தெரிந்தவர்கள் மூலம் கிரயம் வாங்கினேன். அவர்கள் யார் என்றால் என்மாமனார் தான் பேசினார் எனக்கு தெரியாது. சொத்தை கிரயம் வாங்குவதற்கு முன்பு ஏற்கனவே யாருக்கு பாத்தியப்பட்டிருந்தது, மற்றும் யாரிடமிருந்து யார் கிரயம் வாங்கினார்கள் என்ற விவரத்தை என்மாமனாரும் கணவரும் விசாரித்தார்கள். சொத்தை கிரயம் பேசியது மற்றும் எவ்வளவு ரூபாய் போன்ற விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். ரூ.38லட்சத்துக்கு விலைபேசப்பட்டது. என்மாமனார் பெயர் ராஜு ஆகும். என்மாமனார் கிரயபத்திரத்தில் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை என்றால் சரிதான். என்மாமனார் ஊரில் இருக்கிறார். என்கணவர் தற்போது வெளிநாட்டில் இருக்கிறார். எதிர்வழக்குரை தாக்கல் செய்ய மற்றும் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்ய நான் தான் விவரம் சொன்னேன். 1984ம்ஆண்டு நல்லத்தம்பி என்பவர் கிரயம் வாங்கிய பத்திரத்தை நான் பார்த்துள்ளேன். அக்கம் பக்கம் விசாரித்த நபர்கள் யார் என்றால் போஜராஜன் மற்றும் எதிர்வீட்டில் உள்ள லட்சுமி ஆகியோரிகளிடம் விசாரித்தேன். மேற்படி இருவரும் எனக்கு கிரயம் கொடுத்தவர்களுக்கு கிரயம் பேசி விடவில்லை. 2 முதல் 4 பிரதிவாதிகள் எப்படி கிரயம் வாங்கினார்கள், கிரய தொகை யாரால் கொடுக்கப்பட்டது போன்ற விவரத்தை நான் விசாரித்தேனா என்றால் விசாரித்ததில் சொந்தமாக கிரயம் வாங்கியதாக சொன்னார்கள். 1ம் பிரதிவாதியிடம் நான் போய் சொத்து சம்மந்தமாக விசாரிக்கவில்லை. சாட்சி தன்மாமனார் விசாரித்ததாக கூறுகிறார். அறிவிப்பு அனுப்பிய பின்னர் 1ம் வாதியை நான் நேரில் போய் பார்த்தேன். அறிவிப்பு வந்த மறுநாள் போய் பார்த்தேன். நான் 1ம் வாதியை பார்க்கவில்லை என்றும், என்னிடம் அவர் சும்மாதான் நோட்டீஸ் விட்டேன் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு கிரயம் கொடுத்தவர்களை நான் போய் பார்த்தேன்.

அவர்கள் பஞ்சாயத்து பேசிக்கொண்டிருப்பதாகவும், எனவே பதில் நோட்டீஸ் அனுப்பவேண்டாம் என்று சொன்னார்கள். வாதிகள் குடும்பத்தில் பாகப்பிரிவினை ஏற்பட்டு சில சொத்துக்களை விற்றதாக நான் கூறும் விவரம் பற்றி எனக்கு தெரியாது என்றும், கிரயம் கொடுத்தவர்கள் சொன்னதின் அடிப்படையில் அவ்வாறு கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் கிரயம் வாங்குவதற்கு முன்பு பார்த்த வில்லங்க சான்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு கிரயம் கொடுத்தவர்கள் எனக்கு வேண்டியவர்கள் என்றும், அதனால் என்பெயரில் ஆவணத்தை ஏற்படுத்திகொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களை கிரயம் கொடுப்பதற்கு 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல. என்னுடைய கிரயபத்திரத்தில் கிரய தொகை ரூ.28லட்சம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கிரயதொகை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவாசொத்தில் வாதிகள் கோரும்பாகம் அவர்களுக்கு கிடைக்கக்கூடியது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:</u>**

இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.